**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 126/2024**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சசிக்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. காளிமுத்து** | **Calling** | : | |
| **Village** | : | **பேகம்பூர்** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **45** |
| | | | **Dated** | : | **11.12.2024** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**A1 to A3 present, But their counsel not present. The accused represented that they crossed the witness by their counsel on some other date. Prosecution counsel present. Hence the witness examined, in the presence of accused.**

**பட்டியல் சாட்சி 2 திரு. சசிக்குமார் ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அசா. 1 என் மனைவி. 18-ம் தேதி 2021-ம் வருடம் மாதம் நினைவில் இல்லை, மதியம் சுமார் 01.00 மணிக்கு மேல் இருக்கும். என் அண்ணன் மனைவி பள்ளபட்டி ஊராட்சியில் 7-வது வார்டு உரிப்பினராக இருக்கிறார். அன்றைக்கு காலையில் சுமார் 07.00 மணிக்கு நான் அவருக்கு துணையாக வார்டு வேலைகளை பார்த்து கொண்டு இருந்தபோது, ஆத்தூர் குடிநீர் வேண்டி என் தலைமையில் மக்கள் போராட்டம் நடந்தது. அது முடிந்த பிறகு பஞ்சாயத்து தலைவர் பரமன் அவர்கள் தண்ணீர் திறப்பதற்காக சாவியை

என்னிடம் கொடுத்தார். அது முடிந்த பிறகு 2–வது வார்டு உறுப்பினர் சக்திவேல் மூலமாக பள்ளபட்டி, ஊராட்சி மன்ற பள்ளில் மருத்துவ முகாம் நடந்தது. அதில் கலந்து கொண்டு நான் வெளியில் வரும்போது 3–வது எதிரி நான் இரு சக்கர வாகனத்தை சாவி போட்டு திறக்கும் போது வழி மறித்து, " ஏண்டா என் அப்பனை திட்டினாய் என்று கேட்டார். நான் எதுக்குடா திட்டப்போறேன் என்று கேட்டேன். அப்போது 1–வது எதிரி என் பின்புறம் இருந்து பின்னந்தலையில் அரிவாளால் வெட்டினார். நான் வலது கையால் தடுக்க முற்பட்ட போது ஆள்காட்டி விரல் மற்றும் உள்ளங்கையின் அருகே காயம் ஏற்பட்டது. நான் அங்கு இருந்து தப்பித்து என் வீட்டிற்கு சென்று விட்டேன். அங்கு இருந்து என் மனைவி மற்றும் அருகில் இருந்தவர்கள் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு நான் மயக்கம் அடைந்து விட்டேன். அதன் பிறகு என்னை மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்று கிசிக்சை அளித்த விபரத்தை தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர். நீதிமன்றதில் என்னிடம் காட்டப்படும் அரிவாளா என, என் பின்னால் இருந்து வெட்டியதால் என்னால் சரியாக சொல்ல முடியாது.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை ஆகாததால் எதிரிகளின் வேண்டு கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2024.12.11 18:09:40 +0530